செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

**கலைப் புலம்**

**நடத்தும்**

# தமிழர் மரபில் இசைக் கருவிகள்

**பயிலரங்கம் - 03**

**(16.06.2023 - 22.06.2023)**

## அறிவிப்பும் அழைப்பும்

தமிழ் மொழியை இயல், இசை, நாடகம் என முத்தமிழாக வளர்த்தவர்கள் தமிழர்கள். முத்தமிழில் ஒன்றான இசைத் தமிழ் தொன்மையும் சிறப்பும் வாய்ந்தது. இக்கால இசைக்குப் பண்டைய தமிழிசையே அடிப்படையாக இருந்தது. தமிழர்கள் முதலில் இயற்கையிலிருந்து இசையையும், இசைக் கருவிகளையும் உருவாக்கிக் கொண்டனர். பண்டைய காலத்தில் மனிதன் தன்னுடைய உணர்வுகளைப் பகிர்ந்துகொள்ள பயன்படுத்தியுள்ள கருவிகள், தொடக்கத்தில் வெறும் கருவிகளாக மட்டுமே பயன்பாட்டில் இருந்திருக்கின்றன. காலப்போக்கில் அவை, பண்படுத்தப்பட்ட இசையை இசைக்கும் இசைக் கருவிகளாக வடிவம் பெற்றன.

பாணர்கள் பண்ணுடன் தொடர்புகொண்டவர்களாவும் குழல், யாழ், பறை முதலிய பல இசைக் கருவிகளையும் இசைப்பவர்களாகவும் விளங்கினர். காலப்போக்கில் இசைக் கருவிகளின் பாகுபாட்டிற்கு ஏற்ற முறையில் பல குடிகளாகப் பிரிந்தனர். பண்டைய தமிழகர்கள் இயற்கைச் சூழலுக்கேற்ப நிலவியலைப் பகுத்து அதற்கேற்ப ஒவ்வொரு நிலத்திற்கும் யாழ், பறை போன்ற இசைக் கருவிகளைப் பயன்படுத்தி வந்தனர். தொன்மைக் காலத்திலேயே இசைக் கருவிகளைத் துளைக்கருவி, நரம்புக்கருவி, தோற்கருவி, கஞ்சக்கருவி என நான்கு வகையாகப் பகுத்துள்ளனர்.

சங்க காலத்தில் பல வகையான துளைக்கருவிகள் இருந்தன. அவை, சங்கு, குழல், தூம்பு, வயிர், திருச்சின்னம், எக்காளம் முதலியனவாகும். நரம்புக் கருவிகளை மீட்டுக்கருவி, வில்கருவி, அடிக்கருவி என மூன்று வகையாகப் பகுக்கின்றனர். இவற்றுள்

பழமையான யாழ் ‘மீட்டுக்கருவி’ வகையைச் சார்ந்தது. யாழ், நரம்புக் கருவிகளில் முதன்மையானதாகும்.

செவ்விலக்கியங்களில் சங்ககால மக்களின் இசைக் கருவிகள் பற்றிய பல்வேறு செய்திகள் காணப்படுகின்றன. இசைக் கருவிகளைத் தரத்திற்குத் தக்கவாறு, இடத்திற்கு ஏற்றவாறு பாகுபடுத்தி, அவற்றிற்குப் பண் அமைத்துக் காலங்காலமாகப் பின்பற்றியும், காப்பாற்றியும் வந்துள்ள தமிழர்தம் புலமை சிறப்புக்குரியது. கடந்த அரை நூற்றாண்டு காலமாகத் தமிழ் இசைக்கலை குறித்த ஆய்வுகள் பெருமளவில் நடைபெற்று வந்துள்ளதை அறியலாம். இந்த ஆய்வுகளின் வழியாகத் தமிழிசையின் பழமையும், சிறப்பும் ஆராயப்பட்டு அதன் தனித்துவமான சிறப்புகள் வெளிக்கொணரப்பட்டுள்ளன. இவற்றோடு நின்றுவிடாமல் இத்துறை சார்ந்து மேலும் பல பன்னோக்கு ஆய்வுகளை நிகழ்த்த வேண்டிய நிலையில் உள்ளோம்.

இவற்றைக் கருத்தில் கொண்டு சங்க கால இசைக்கருவிகளின் தோற்றம், மரபிசை முறை, தனித்தன்மை, வளர்ச்சி நிலை ஆகியவற்றை ஆய்வு மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கும் நோக்கில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் தமிழர் மரபில் இசைக் கருவிகள் எனும் பயிலரங்கினை நடத்தவுள்ளது. பயிற்றுரை, செயல்முறைப் பயிற்சி (ஆய்வு மாணவர்களுக்கு சில இசைக் கருவிகளை இசைத்துக் காட்டுதல்) என்ற இரு நிலைகளில் இப்பயிலரங்கம் நடைபெறும். தமிழிசை தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளும் மாணவர்கள் மட்டும் இப்பயிலரங்கில் பங்கேற்றுப் பயன்பெறலாம்.

ஆய்வு மாணவர்கள் நேரடியாகப் பயன்பெறும் வகையில் நடத்தப்பெறும் இப்பயிலரங்கில் இசைத் துறை சார்ந்த அறிஞர்கள், வாத்திய இசைக் கலைஞர்கள் பயிற்சி அளிக்க உள்ளனர். தமிழிசை ஆய்வுக் களத்தை வளப்படுத்தும் வகையில் ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்ட ஆய்வு மாணவர்கள் இப்பயிலரங்கில் பங்கேற்றுப் பயன்பெறுமாறு அழைக்கிறோம்.

இப்பயிலரங்கமானது 16.06.2023 முதல் 22.06.2023ஆம் நாள் முடிய ஏழு நாட்கள் நடைபெறவுள்ளது. பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:

1. பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை - 20.
2. பயிலரங்கு நடைபெறும் நாள்கள்: 16.06.2023முதல் 22.06.2023 முடிய 7 நாட்கள்
3. பயிலரங்கு நேரம்: 10.00 - 01.00 வரை & 02.00 - 5.00 வரை.

4. பங்கேற்பாளர்களே தங்குமிடத்தை ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
5. மத்திய அரசு விதிமுறைகளின்படி பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படி, தினப்படி வழங்கப்படும்.
6. மதிய உணவும், தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
7. பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் கீழே தரப்பட்டுள்ள விண்ணப்பத்தை நிறைவு செய்து workshopa@cict.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும். இப்பயிலரங்கைப் பற்றிய கூடுதல் தகவல்களைத் தெரிந்துகொள்ள மேற்கண்ட மின்னஞ்சல் மூலமாக மட்டுமே தொடர்புகொள்ள வேண்டும்.
8. விண்ணப்பக் கட்டணம் ஏதும் இல்லை.
9. விண்ணப்பம் உரிய வழியாக அனுப்பிவைக்க வேண்டும்.
10. செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மின்னஞ்சல் / புலனம் வழியாக ஆணை அனுப்பி வைக்கப்படும்.
11. விண்ணப்பம் வந்துசேர வேண்டிய இறுதி நாள்: 09.06.2023 இதற்குப் பின்வரும் விண்ணப்பம் ஏற்கப்படமாட்டாது.
12. இப்பயிலரங்கில் பங்கேற்போர் 26 அமர்வுகளிலும் தொடர்ந்து கலந்துகொள்ள வேண்டும். அமர்வுக்குத் தாமதமாக வருதலைத் தவிர்த்தல் வேண்டும். தாமதம் மற்றும் இடைநிற்றல் இருப்பின் தினப்படியும் சான்றிதழும் வழங்கப்படமாட்டா.
13. இப்பயிலரங்கில் பங்கேற்கத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 10.06.2023 அன்று தகவல் தெரிவிக்கப்படும்.
14. பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்

(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)

செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100

CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL

(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)

Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

## கலைப் புலம்

நடத்தும்

## தமிழர் மரபில் இசைக் கருவிகள்

## பயிலரங்கம் - 03

(16.06.2023- 22.06.2023)

### விண்ணப்பப் படிவம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | பெயர்\| Name | தமிழ் | | | | | | நிழற்படம்/ Photo | |
| | | English | | | | | | | |
| 2. | பிறந்த நாள் / வயது Date of Birth/ Age | | | | | | | | |
| 3. | பாலினம் \| Gender (✓) | ஆண்/ Male | | பெண்/ Female | | திருநங்கை/ Transgender | | | |
| 4. | வகுப்பு \| Class (✓) | | | பொது/ General | | இ.பி.வ.\| OBC | | பட்டியல் இனம் \| SC/ ST | |
| 5. | கல்வித் தகுதி \| Educational Qualification | | | | | | | | |
| 6. | ஆய்வியல் நிறைஞர் & முனைவர் பட்டப் படிப்பில் சேர்ந்த நாள்/ ஆண்டு \| Date of Joining & year in M. Phil & Ph.D. | | | | | | | | |
| 7. | ஆய்வியல் நிறைஞர் & முனைவர் பட்ட ஆய்வுத் தலைப்பு \| M. Phil & Ph.D. Research Topic | | | | | | | | |

| | | |
|---|---|---|
| 8. | பல்கலைக்கழகம்/ கல்லூரி/ நிறுவன முகவரி (தொடர்பு எண் & மின்னஞ்சல்)<br>\| University / College/Institute Address (Contact number & Email) | |
| 9. | இல்ல முகவரி & தொடர்பு எண் \|Residential address & Contact number | |
| 10 | புலன எண் \| WhatsApp number | |
| 11 | செம்மொழி நிறுவனம் முந்தைய கல்வியாண்டுகளில் நடத்திய பயிலரங்குகளில் கலந்து கொண்டீர்களா? ஆம் எனில் விவரம் தருக \| Did you attend the workshop conducted by the CICT in previous academic years? If yes, please give details | ஆம் \| Yes<br>இல்லை\| No |
| | | |

**(கையொப்பம்)**

**நெறியாளர் /துறைத் தலைவர்/**

**முதல்வர்/ பதிவாளர் உரிய முத்திரையுடன்**

**இடம்:**

**நாள்:**